# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.
Prosecution witness for P.W. 18.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சுந்தரமூர்த்தி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.07.2025.

A1 to A3 present.

முதல் விசாரணை

நான் தற்போது எட்டையபுரத்தில் குடியிருந்து கைபேசி கடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் போலீசார் வந்து எங்கள் கடைக்கு வந்து ஒரு பென்ட்ரைவ் வேண்டுமென்று கேட்டார்கள். அதற்காக பில் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். நான் பில் போட்டுக் கொடுத்தேன். மேற்படி பென்ட்ரைவ் 16 GB மெமரி திறன் கொண்டது. அந்த பென்ட்ரைவ் உலோகத்தால் ஆன பென்ட்ரைவ். போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசாருக்கு நான் கொடுத்த மேற்படி பில் **அ.சா.ஆ 13**. இந்த ஆவணம் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னை ஆய்வாளர்தான் விசாரித்தார். பென்ட்ரைவை ஒரு காவலர்தான் வாங்கிச் சென்றார். அ.சா.ஆ 13–ல் கையால் எழுதப்பட்ட வாசகங்கள் என் கைப்பட எழுதப்பட்டதல்ல என்றால் சரிதான். அதில் பென்ட்ரைவின் மெமரி குறித்தும், அதன் எண்ணிக்கை குறித்தும், விலை குறித்தும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கடையின் உரிமையாளர் என்ற

முறையில் நான் கையொப்பமிடவில்லை. எங்கள் கடையின் உரிமையாளர் மணிராஜ். கடையில் மொத்தம் இரண்டு பேர் வேலை செய்கிறார்கள். மேற்படி கடையில் உள்ள மின்னணு பொருட்களுக்கு வாரண்டி உள்ளது என்றும், அதனால் அவற்றிற்கு சரக்கு மற்றும் சேவை வரி உண்டு என்றும் சொன்னால் சரிதான். அ.சா.ஆ 13 சரக்கு மற்றும் சேவை வரி பில் அல்ல. போலீசார் எங்கள் கடையில் அடிக்கடி பொருட்கள் வாங்குவார்கள். அவ்வாறு வாங்கும் பொருட்களுக்கு அ.சா.ஆ 13 போல பில் வழங்கி அதற்காக பல வழக்குகளில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில்தான் முதல்முறையாக சாட்சியம் அளிக்கிறேன். போலீசார் மின்னணு பொருட்களை கையாளுவதற்கு என்னை அடிக்கடி அழைப்பார்கள் என்றால் சரியல்ல. நான் ஆனந்தம் மொபைல்ஸ் என்ற கடையில் வேலை பார்க்கவே இல்லை என்றால் சரியல்ல. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. நான் பிரண்ட்ஸ் ஆப் போலீசில் இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி கடையின் உரிமையாளர் இல்லை என்பதால்தான் அ.சா.ஆ 13 ல் உரிமையாளர் என்ற முறையில் கையொப்பமிடவில்லை என்றும், அதில் சரக்கு மற்றும் சேவை வரிக்கான குறிப்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ 13 போலீசாரால் உற்பத்தி செய்யப்பட்டு இந்த வழக்கிற்காக என்னை சாட்சியாக சேர்த்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

1, 3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.07.24 17:00:38 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.
Prosecution witness for P.W. 19.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. சத்தியபிரியா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.07.2025.

A1 to A3 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டியில் வீட்டோடு இருந்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 1ம் எதிரி என் தம்பி. 1ம் எதிரிக்கு நான் கைபேசிக்கான சிம் கார்டை வாங்கி கொடுத்தேனா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 1ம் எதிரி என் தாயாருடன் வசித்து வந்ததாகவும், அவர் லாரி ஓட்டுநராக தொழில் செய்து வந்ததாகவும், 1ம் எதிரிக்கு கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எனது பெயரில் ஒரு ஜியோ சிம்கார்டு நான் வாங்கி கொடுத்ததாகவும், அதன் இணைப்பு எண் 8610684015 என்றும், அதை 1ம் எதிரி பயன்படுத்தி வந்ததாகவும், 2ம் எதிரியின் மாமனாரான ஆர்.கே.துரை என்பவரை 1ம் எதிரி லாரியை ஏற்றி கொலை செய்து விட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், 1ம் எதிரிக்கு நான்தான்

மேற்படி சிம் கார்டை வாங்கி கொடுத்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது 1ம் எதிரி என் தம்பி என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் குடியிருப்பது கோவில்பட்டி. 1ம் எதிரியும், என் தாயாரும் குடியிருப்பது கயத்தார் வட்டம், பன்னீர்குளம் கிராமம் என்றும் சொன்னால் சரிதான். 1ம் எதிரி JK டிரான்ஸ்போர்ட் என்ற நிறுவனத்தில் மதுரையில் வேலையில் இருந்தார் என்றால் சரிதான். அந்த நிறுவனம் கப்பலில் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை கன்டைனரில் தூத்துக்குடி துறைமுகத்திற்கு ஏற்றிச் சென்று சேர்க்கும் நிறுவனம் என்றால் சரிதான். 2022 முதல் 2024 ஏப்ரல் மாதம் இந்த வழக்கில் கைதாகும் வரை 1ம் எதிரி மேற்படி மதுரை JK டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். என் கணவருக்கும், 1ம் எதிரிக்கும் பேச்சு வார்த்தை இல்லை. அதனால் எங்களுக்கும், 1ம் எதிரிக்கும் போக்குவரத்து இல்லை. 02.04.2024 அன்று என் தாயார் என்னை தொடர்பு கொண்டு 1ம் எதிரியை பன்னீர்குளம் கிராமத்திலிருந்து காலை 10 மணியளவில் எட்டையபுரம் காவல்நிலையத்திலிருந்து போலீசார் வந்து அழைத்துச் செல்வதாகவும், போலீசார் எதுவும் சொல்லவில்லை என்றும், அதனால் காவல்நிலையம் சென்று என்னவென்று விசாரிக்க வேண்டுமென்றும் என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். அதனால் 02.04.2024 அன்று நானும், என் தாயாரும் எட்டையபுரம் காவல்நிலையம் சென்று என்னவென்று விசாரித்தோம் என்றால் சரிதான். அப்போது போலீசார் சும்மா விசாரணைக்கு அழைத்து வந்துள்ளோம் என்றும், விசாரணை முடிந்த பிறகு அனுப்பிவிடுவோம் என்றும் சொன்னார்கள் என்றால் சரிதான்.

நாங்கள் பெண்கள் என்பதால் அங்கிருக்க வேண்டாம் என்றும், நான் பார்த்துக் கொள்கிறேன் என்று 1ம் எதிரி சொன்னதாலும், நாங்கள் வந்துவிட்டோம் என்றால் சரிதான். 1ம் எதிரியை அன்று அழைத்துச் சென்ற போலீசார் திருப்பி அனுப்பவில்லை. நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திவிட்டார்கள்.

1, 3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.07.24 17:00:47 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.